[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 28

அறிவிப்புகள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, விதிகளுக்குட்பட்டு கவன ஈர்ப்புகளாக அனுமதிக்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விவர அறிக்கை கோரி அனுப்பப்பட்டன. இவ்வறிவிப்புகளில் உறுப்பினர்கள் அளித்த பொதுப் பிரச்சினை மற்றும் முக்கியமான பிரச்சினை குறித்த அறிவிப்புகள் 27—8—2015 அன்று முதல் 2 நாட்கள் தவிர்த்து, ஏனைய அனைத்து நாட்களிலும், நாள் ஒன்றுக்கு ஒரு கவன ஈர்ப்பு வீதம் 28—9—2015 வரை மொத்தம் 14 கவன ஈர்ப்புகள் பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி உறுப்பினர்களால் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட, 14 கவன ஈர்ப்புகளில், 9 எதிர்க் கட்சிகளைச் சார்ந்த மொத்தம் 21 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மொத்தம் 31 முறை வாய்ப்பளிக்கப்பட்டு, தங்களது கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அதன் விவரம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சிக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள் 8, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு 8, தி.மு.க. விற்கு 5, இந்திய தேசிய காங்கிரஸ்—க்கு 3, மனிதநேய மக்கள் கட்சிக்கு 3, தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு 1, பாட்டாளி மக்கள் கட்சிக்கு 1, புதிய தமிழகம் கட்சிக்கு 1, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு 1. விவர அறிக்கை பெறப்பட்டு, பேரவையில் எடுத்துக் கொள்ளப்படாத கவன ஈர்ப்புகளின் விவர அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) குளச்சல் தொகுதி, ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தப்படுத்துதல்—தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள்கூட இன்று காலை 9—58 மணிக்குத்தான் இந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தார்.

பிற்பகல் 12—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இன்று காலை 9—58 மணிக்குத்தான் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தார்.

2015 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் இன்று காலை 9—58—க்குத்தான் கொடுத்தார். இருந்தாலும், பதிலைப் பெற்று, இங்கே நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏ.வி.எம். கால்வாய், கேரள மாநிலம், பூவாறிலிருந்து ஆரம்பித்து கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடுபுதூரில் முடிகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நீரோடித்துறை முதல் மண்டைக்காடுபுதூர் வரை மொத்த நீளம் 27 கிலோ மீட்டர் ஆகும். இக்கால்வாய்க்குப் பாசனப் பரப்பு ஏதுமில்லை. இந்தக் கால்வாய் முதலில் பாய்மரக் கப்பல் போக்குவரத்துக்கென தொடங்கப்பட்டது. தற்சமயம் பாய்மரக் கப்பல் போக்குவரத்து நடைபெறவில்லை. இக்கால்வாய் இருப்பதால் நிலத்தடி நீரில் கடல் நீர் புகாத வண்ணம் பாதுகாக்கிறது. முகத்துவாரங்கள் அனைத்தையும் அவ்வப்போது சுத்தப்படுத்தி, கடல் நீர் நிலங்களில் புகா வண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏ.வி.எம். கால்வாயைத் தூர்வாரி புனரமைத்து, உள்நாட்டுப் படகு போக்குவரத்திற்கான தொலைநோக்குத் திட்டமாக கொல்லன்கோடு முதல் இரயுமன்துறை வரை எல்.எஸ். 0 முதல் 9/600 கிலோ மீட்டர் வரை ரூ.78.30 கோடியும், தேங்காய்ப்பட்டினம் முதல் மண்டைக்காடுபுதூர் வரை எல்.எஸ். 10 கிலோ மீட்டர் முதல் 27 கிலோ மீட்டர் வரை ரூ.320.66 கோடியும், மண்டைக்காடு முதல் கன்னியாகுமரி வரை புதிதாக நீட்டிப்பு செய்ய ரூ.812.64 கோடியும், ஆக மொத்தம் ரூ.1,211.60 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் ஏ.வி.எம். கால்வாயில் தற்போது உள்ள தாழ்வான பாலங்களில் படகுகள் அடியில் செல்லும்விதமாக, மேம்பாலங்களாக மாற்றியும், ஆக்கிரமிப்புகளை அகற்றியும், கால்வாய் அடித்தளம் வரை தூர்வாரி படகு அணுகு தளங்கள் மற்றும் பக்கச் சுவர்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடுகள் சம்பந்தமாக விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதார அமைப்புத் திட்ட உருவாக்கம், சென்னை அவர்களின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கும்பொருட்டு, மதிப்பீடுகள், தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, நீர் வள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம், மதுரை அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது குறிப்புரைகளுடன் திரும்பப் பெறப்பட்டு, குறிப்புரைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.